Registered as a Newspaper

ஸ்ருடியோ
வீ ன ஸ்
சிறந்த வீடியோ
படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

ஸ்ருடியோ
வீ ன ஸ்
சிறந்த கலர்,
கறுப்பு - வெள்ளை
படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸு கார்த்திகை மீ 16 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அல் பிறை 29 (02-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-5

★ 'நடைபாதை' இணைப்புத் திட்டமும் நிராகரிப்பு

# இனப்பிரச்சினை பேச்சில் பெரும் முட்டுக்கட்டை!




ஓ! அரசாங்கம் இப்ப பேச்சுக்காக அரசியல் தீர்வு எண்டு பம்மாத்துக் காட்டுதெல்லே. அப்ப அனுரா இராணுவத் தீர்வு எண்டு தானே சொல்ல வேணும். அது தானே அரசியல்!

## கொட்டடிப் பகுதியில் பலர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 2

கொட்டடிப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து வருகிறார்கள்.

அண்மைக்காலமாக யாழ் கோட்டை முகாமில் இருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்கள் காரணமாகவும் அடிக்கடி மேற்கொள்ளப்படும் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவுமே மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

நேற்றும் இப்பகுதியில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

பல வீடுகள் அண்மைக்கால ஷெல் தாக்குதல்களால் சேதமடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## முறிந்துபோகும் அறிகுறி இருப்பதாக டில்லியில் தகவல்

புதுடில்லி, டிசம்பர் 1

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களில் பெரும் முட்டுக்கட்டை ஏற்படும் அறிகுறிகள் தென்படுவதாக இங்கு அரசாங்க வட்டாரங்கள் மூலம் அறியவந்துள்ளது.

இந்தியா, தமிழர் சார்பில முன்வைத்த ஆகக்குறைந்த திட்டமான வடக்கு, கிழக்குத் தமிழ் மாகாணங்களை 'நடைபாதை' மூலம் இணைக்கும் திட்டத்தையும் இலங்கை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

அதனால் மேற்கொண்டு பேச்சுக்களை நடத்துவதில் அர்த்தமில்லை என்ற கருத்து இங்கு நிலவுகிறது.

இலங்கை அரசின் பிடிவாதப்போக்கினால் இனப் பிரச்சினைப் பேச்சுக்களில் பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசின் போக்கில் மாற்றம் தென்படும் பட்சத்திலேயே இணை அமைச்சர் குழு கொழும்பு விஜயத்தை உடனடியாக மேற்கொள்ளும். இல்லையேல் அடுத்த இரண்டு வாரங்களுக்கு இணை அமைச்சர் குழுவின் விஜயம் இடம்பெறாது என புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படும் தமிழ் மாகாணத்தை திருமலை மாவட்டத்தில் அடையாளம் காணப்படும் தமிழ்ப் பகுதிகள் கொண்ட நடைபாதை, (Corridor) ஊடாக இணைக்கும் திட்டத்தை இலங்கை அரசு ஏற்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம்

இத்திட்டத்தை ஏற்றால் மட்டுமே தமிழ்ப் போராளிகளை ஓர் அரசியல் தீர்வுக்கு இணங்கச் செய்யலாம் என்று இந்திய அரசு கருதுகிறது.

இத்திட்டத்திற்கு இலங்கை அரசுதரப்பில் இருந்து சாதகமான பதில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ★ நேற்றும் கடமைக்கு செல்லவில்லை

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ் தொலைத்தொடர்பு ஊழியர்கள் நேற்றும் கடமைக்குச் செல்லவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ் பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்து தொலைத்தொடர்பு திணைக்களத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது. இதனைஅடுத்தே ஊழியர்கள் கடமைக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்து வரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி இராணுவ இணைப்பு அதிகாரி

கொழும்பு, டிச.2

கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பு அதிகாரியாக லெப்டினன்ட் கேர்ணல் குலதுங்க நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்கிறார் அனுரா

கொழும்பு, டிசம்பர் 2

இனப்பிரச்சினைக்குத் தீர்வு இராணுவ ரீதியில்தான் காணப்பட முடியும். அதைவிட வேறு வழி இல்லை.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இராணுவத் தீர்வு காணப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா பகிரங்கமாக அறிவித்து இருப்பது இதுவே முதல் தடவை

களுத்துறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சுதந்திரக்கட்சிப் பொதுக் கூட்டத்திலேயே இந்த அறிவிப்பை எதிர்க்கட்சித் தலைவர் விடுத்தார்.

யுத்தம் ஒன்றின் மூலம்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

சுதந்திரக் கட்சி பதவியில் இருந்தால் பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்க பாதுகாப்புப் படையினருக்குப் பூரண அதிகாரத்தை வழங்கி இருக்கும். இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னதாவது:

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கு சுதந்திரக் கட்சி முட்டுக்கட்டையாக இருக்காது.

எந்த அரசியல் தீர்வும் நாட்டைப் பிரிப்பதற்கு உதவும் என்று கண்டால் சுதந்திரக்கட்சி அதை எதிர்க்கத் தயங்காது—

இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

இராணுவத் தீர்வுதான் இனப்பிரச்சினைக்கு முடிவு காண ஒரேவழி என்ற திரு. அனுரா பண்டார நாயக்காவின் பேச்சை மறுத்து திருமதி பண்டாரநாயக்கா கூட்டத்தில் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. (இ-எ)

## ஜீ. சி. ஈ வினாத்தாள் வந்துசேர்ந்தது

யாழ்ப்பாணம், டிச 2

இம்மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ. சி. ஈ. (சாதாரணதர) பரீட்சைக்கான வினாத்தாள்களில் ஒருபகுதி நேற்று கொழும்பிலிருந்து விமானம்மூலம் வந்து சேர்ந்தது.

கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் பலாலி முகாம் சென்று வினாத்தாள் பொதிகளைக் கையேற்றார். (இ-5)

## சிகிரியாவில் பயிற்சி முகாம்

கொழும்பு, டிச, 2

சிகிரியா விமானப் படைத்தளத்தில் பயிற்சி முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

தற்சமயம் 40 பொலீஸாருக்கு யுத்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

கண்டி, குருநாகல், மட்டக்களப்பு பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்தவர்களே இப்பொலீஸார்.

(இ-ஐ-எ)

## பயங்கரவாத சட்டத்தின்கீழ் 60 சிங்களவர்

கொழும்பு, டிச.2

சுமார் 60 சிங்களத் தீவிரவாதிகள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதித் தீவிரவாதிகளுடன் தொடர்புவைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் இவர்கள் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மனித உரிமை இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

வேறு சிலர் தலைமறைவாகி விட்டனர் என்றும் கூறப்படுகின்றது

(இ-எ)

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்

## விரிவுரைக்கு திரும்பும் சூழ்நிலை உருவாக வேண்டும்

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் விரிவுரைகளுக்கு உடனே திரும்பக்கூடிய சூழ்நிலையை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்;

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விஜிதரன் காணாமல் போனது தொடர்பாக அவரைத் தேடுவதற்கான முயற்சியில் அக்கறை கொண்டவர்கள் எல்லோரும் துரிதமாக இதில் ஈடுபட வேண்டும் எனவும் துணைவேந்தர் கேட்டுள்ளார்.

மாணவர் உண்ணாவிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே. ஆர். பேச்சு நடத்த பகிரங்கமாக அழைத்தாலும் போகமாட்டேன்

## அது தற்கொலைக்கு ஒப்பாகும் என்கிறார் பிரபா



சென்னை, டிச. 1

''பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜே ஆர் ஜெயவர்த்தன பகிரங்கமாக அழைப்பு அனுப்பினாலும் நிச்சயமாகப் போக மாட்டேன்.

தமிழீழத்தை ஒப்புக்கொள்ளாமல் சும்மா சந்திப்பதில் என்ன அர்த்தம்? அது தற்கொலை செய்வது போன்றதாகும்''.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் இருந்து வெளிவரும் ''தேவி'' வாரப் பத்திரிகைக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி தேவியில் அவரது சிறப்புப் பேட்டி வெளிவந்துள்ளது.

''தேவி'' செய்தியாளர் கேட்ட கேள்விகளும் திரு. பிரபாகரன் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: பெங்களூருக்கு அவசரமாக அழைக்கப்பட்டுச் சென்றீர்கள். அங்கு நீங்கள் நிர்ப்பந்தம் செய்யப்பட்டதாக அறிகிறோம். உண்மையில் என்ன நடந்தது என்பதைச் சொல்ல முடியுமா?

பதில்:- மறைப்பதற்கு ஒன்றுமில்லை, நிர்ப்பந்தம் ஏதும் உண்மையிலேயே கிடையாது. எப்போதும் போல் வழக்கமானது தான் நடந்தது

எங்களை மட்டும் தனித்து கூப்பிட்டுப் பேசினார்கள் என்பதுதான் புதிது,

எங்களின் தனித்தன்மையை உணர்ந்ததன் காரணமாக எங்களிடம் பேச்சு நடத்தினால் மட்டுமே நியாயம் காண முடியும் என்பதை அறிந்திருக்கிறார்கள்.

இதனால் தான் ஜெயவர்த்தன சொன்ன திட்டத்தை எங்களிடம் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பேச்சு வார்த்தையில் மத்திய அமைச்சர்கள் நட்வர்சிங், சிதம்பரம், இலங்கை தூதர் டிக்ஸிற், முதல்வர் எம்.ஜி, ஆர், அமைச்சர் பண்ருட்டி, நான், பாலசிங்கம், திலகர் ஆகியோர் கலந்து கொண்டோம்.

வடக்கு மாகாணத்தை தனியாகவும், கிழக்கு மாகாணத்தை தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற ரீதியில் மூன்று பகுதிகளாக பிரிக்கலாம் என்று ஜே ஆர். சொன்னதாக எங்களிடம் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இரண்டாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## விஜே மீண்டும் யாழ் வருகிறார்



கொழும்பு, டிச. 2

ஸ்ரீலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்க வெகு விரைவில் யாழ்ப்பாணம் வர இருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினால் சிறை வைக்கப்பட்டுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

உறவினரைப் பார்க்க

## பலாலி ராணுவ முகாம் சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிச. 2

உறவினர்களைப் பார்க்க பலாலிக்கு சென்றவர்கள் பலாலி இராணுவ முகாம் சென்றியினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இரண்டு கிழமைக்கு முன்னர் நெடுந்தீவுக் கடலில் கைது செய்யப்பட்டவர்கள் பலர் தொடர்ந்தும் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்படாதவர்களின் உறவினர்களே இவர்களைப் பார்க்கச் சென்றனர்.

எனினும் பலாலி இராணுவ முகாம் அதிகாரி அங்கு இல்லாததால் சென்றிக்கு நின்ற சிப்பாய்கள் இவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

(இ-10)

### சுபநேரம்

02—12—1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:

10.45முதல் 12.15 வரை

ராகுகாலம்:

3.15 முதல் 4.45 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பன்றிகளால் பெரும் தொல்லை!

யாழ்ப்பாணம், டிசம்பர் 2

யாழ். நகரில் கட்டாக்காலிப் பன்றிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இதனால் வாகனப் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சல் ஏற்படுகிறது. பொது மக்களும் சிரமத்துக்கு உள்ளாகிறார்கள்.

யாழ். பெரியாஸ்பத்திரி வளவுக்குள்ளும் பன்றிகள் சர்வசாதாரணமாகத் திரிந்து குப்பை கூழங்களைக் கிளறித் தின்கின்றன.

பன்றிகளால் மூளைக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயநிலை தோன்றி இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(இ-10)

ஜே. ஆரின் புதிய யோசனைகள்

# சரித்திரத்தை மாற்றி அமைக்கும் செயல்

## பத்மநாபா அறிக்கை

யாழ்ப்பாணம், டிச 2

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள தமிழ் பிரதேசங்களை வரையறை செய்யும் கடமையை எல்லை நிர்ணய ஆணைக்குழு ஒன்றிற்கு கையளிப்பது என்ற ஜே. ஆரின் யோசனை, சரித்திரத்தை மாற்றி எழுத முற்படுகின்ற ஒரு செயல்.

இப்படி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் திரு பத்மநாபா விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

ஜே. ஆரின் புதியயோசனைகள் முன்னைய பிரேரணைகளிலும் பார்க்க முன்னேற்றகரமாக அமைவதற்குப் பதில் பின்னடைவானதாகவே அமைந்துள்ளது.

ஈழமக்களுக்குப் பாதகமான முறையில் எமது தாயகத்தின் பிரதேச அமைப்பினை மாத்திரமன்றி, ஒரு மெப்பாஒடையும் தொடர்பினையும் இல்லாமல் செய்ய முற்படுவதுடன் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்தினைச் சட்டபூர்வமானதாக்கவும் முயற்சிப்பதாக புதிய யோசனைகள் அமைந்துள்ளன.

மலையகத்தில் வாழும் தமிழ்மக்களையும் அவர்களால் வளர்க்கப்பட்டு, அவர்களின் வாழ்நிலமாகக் கருதப்பட்ட பிரதேசங்களையும் தவிர்த்து இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இப்படி திரு. பத்மநாபா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

(அ-எ)

இளைய தலைமுறையின [illegible] ரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜி- சி- ஈ பரீட்சை
### பாடங்களை மாற்ற அனுமதி

பலாலி, டிச.2

க. பொ. த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் முதல்மொழி, சமயம் போன்ற பாடங்களில் மாற்றம் ஏதாவது செய்ய விரும்பின் இம்முறை அதற்குரிய அனுமதி வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரின் முடிவை ஏற்றுக்கொள்வதாக உறுதிசெய்த கடிதமொன்றினைப் பரீட்சார்த்தி மேற்பார்வையாளர்களிடம் கையளித்த பின்னரே மேற்படி பாடமாற்றத்திற்கு அனுமதி வழங்கப்படும்.

இம்முறை ஏனைய பாடங்களுக்குப் பொருந்தாது என பரீட்சைத் திணைக்கள உயர் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (உ-119)

## பரவைக் கடலில்
### மீன்பிடிக்க முடியாத நிலை

அச்சுவேலி, டிச.2

தொண்டமானாறு-வல்லைவெளி பரவைக் கடலில் மீன்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொண்டமானாறு வல்லைவெளி- கோப்பாய் பகுதி வரை பரந்திருக்கும் குடாக்கடல் நீரேரியில் மாரிப்பருவத்தில் நல்ல தரமான மீன் வகைகள், இறால், நண்டு என்பன பிடிக்கப்படுவது வழக்கம்.

இங்கு மீன்பிடிக்கும் உள்ளூர் மீன் பிடித் தொழிலாளர்கள் வலை வீசியும் அந்தாங்கு கொண்டு வாரியும் கண்டிவேலி அமைத்தும் மீன்பிடித்து தமது ஜீவனத்தை நடத்தக்கூடியதாக இருந்தும் வந்தது.

இந்த வருடம் அவர்களுக்கு இந்த வாய்ப்பு இல்லை.

தொண்டமானாறு இராணுவ முகாமின் கண்காணிப்பும் தொண்டமானாறு, நாவற்குழி முகாம் இடையே மேற்கொள்ளப்படும் ஹெலிக்கொப்டர் போக்குவரத்தும் மீன்பிடித் தொழிலாளரை அச்சமடையச் செய்துள்ளன.

அத்துடன் இந்தப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப் பிரயோகமும் அவ்வப்போது நிகழ்ந்து வருவதில் பரந்த வெளியில் நின்று மீன் பிடித் தொழில் செய்ய முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது. (உ-11)

## மீண்டும் அறிமுகப்படுத்த முயற்சி
# யாழ். பாடசாலைகளில் இருநேர வகுப்புகள்
### கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், டிச 2

இருநேர வகுப்புகள் யாழ் பாடசாலைகளில் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். இதற்கான முயற்சிகளை வடமாநில கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது

இத்தகவலை வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

விளையாட்டுச் சங்கத் தலைவரும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபருமான திரு ஏ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சிகளில் அவர் மேலும் கூறியதாவது:-

விளையாட்டுத்துறை மாணவனை ஒரு வீரனாக மட்டுமன்றி தீரனாகவும் வளர்க்கிறது.

யாழ் பாடசாலைகளில் ஒரு நேர வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதால் மாணவர்கள் மதியத்துடன் வீடு திரும்பி விடுகிறார்கள்.

இதனால் அவர்கள் மாலை வேளையில் பாடசாலையின் புற நடவடிக்கைகளில் பங்குபற்ற முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

மீண்டும் யாழ் பாடசாலைகளில் இருநேர வகுப்புகளை அறிமுகப்படுத்த எனது திணைக்களம் முயற்சி எடுத்து வருகிறது.

இதனால் மாணவர்கள் விளையாட்டுத்துறை உட்பட பலபுற, நடவடிக்கைகளில் ஈடுபடவாய்ப்பு அதிகம் ஏற்படும்.

இலங்கையில் சிறப்பாக இயங்கிவரும் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கங்களில் யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கமே பழமையானது.

இந்தச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கும், பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் தரத்தை உயர்த்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் எமது திணைக்களம் முழு ஒத்துழைப்பையும வழங்கும்.

—இப்படி அவர் கூறினார். (உ)

## கூட்டுக் குழு கண்டனம்

யாழ்ப்பாணம், டிச 2

இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் தொலைத் தொடர்பு திணைக்கள ஊழியர்களும், பொதுமக்களில் ஒருவரும் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பாக வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது.

குழுவின் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் வதிவிடங்கள், வேலைத்தளங்கள் உள்ள பகுதிகளை இராணுவம் ஆக்கிரமிப்பதற்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## விளையாட்டரங்கு

## வட்டுக்கோட்டையில் உதைபந்தாட்ட லீக்
### புதிதாக அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச.2

வட்டுக்கோட்டையில் புதிய உதைபந்தாட்ட லீக் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படவிருக்கிறது.

இதற்கான பூர்வாங்கக் கூட்டம் கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தை யாழ்ப்பாண உதை பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் டாக்டர் கே. வி. எவ். பிலிப்ஸ் குத்துவிளக் கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பல பிரமுகர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

புதிய லீக்கில் பங்குகொள்ள விரும்பும் உதைபந்தாட்டக் கழகங்கள் வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த வி கலைச்செல்வனுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிறது. (உ)

## உணவுத் திணைக்களத்தின் பிராந்திய களஞ்சியம் ப. நோ.கூ. சங்கத்திடம்

ஊர்காவற்றுறை, டிச. 2

ஊர்காவற்றுறையில் இயங்கி வந்த உணவுத் திணைக்களத்தின் பிராந்திய களஞ்சியம் ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டாளர் வழங்கியுள்ளார்

தற்போது தீவுப்பகுதிக்கான போக்குவரத்து சிர்குலைந்துள்ளமையினால் உணவுப்பொருள் விநியோகத்தை உணவுத் திணைக்களம் கைவிட்டிருந்தது.

ஆனால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இப்பகுதிக்கான உணவுப் பொருள்களை ஏற்றியிறக்கி வருகின்றன.

இதனால் உணவுத் திணைக்களத்தினால் வெறுமனே பாவிக்கப்படாதிருந்த உணவுக் களஞ்சியத்தை மேற்படி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உதவி உணவுக் கட்டுப்பாட்டாளர் வழங்கியுள்ளார். (உ-15)

## விவரம் திரட்டப்படுகிறது

மட்டக்களப்பு, டிச. 2

அரசாங்க திணைக்கள கூட்டுத்தாபன சபைகளில் கடமையாற்றும் சகல ஊழியர்களின் விபரங்களையும் தேசிய பாதுகாப்பு அமைச்சு தற்போது திரட்டி வருகிறது.

சகல ஊழியர்களுக்கும் இது தொடர்பான விபர படிவங்கள் திணைக்கள தலைவர்கள் மூலம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

ஊழியரின் குடும்ப விபரம், மனைவியின் குடும்பம், உறவினர்கள் தொழில், தொழில் செய்யும் இடம், தீவிரவாத தொடர்புகள், தண்டனை உட்பட சகல விபரங்களும் இதில் கேட்கப்பட்டுள்ளது. (உ-21)

## விருப்புகள்

Bitsman Institutes, Manipay. 1ஆவது பிரிவு 87ஆம் ஆண்டுக்கான O/L, ஆண்டு 10ஆம், 9ஆம், 8ஆம், 7ஆம், 6ஆம் வகுப்புகளுக்குரிய சகல பாடங்களும், ஆரம்பம்: 5-12-86 வெள்ளி 9.00 காலை.

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## மக்கள் முகம்

### வேலணை கிழக்கு ஐக்கிய நாணய சங்கம்

வேலணை, டிச. 2

வேலணை கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை வேலணை உப அலுவலக நூல் நிலைய மண்டபத்தில் வேலணை கிழக்கு முன்னாள் கிராமோதய சபைத் தலைவரும், ஆசிரியருமான திரு ச மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் வேலணை கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. க கனகரெத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்) செயலாளர்:- திரு. கா. சணேசலிங்கம் (விசேட சேவை அலுவலர்) பொருளாளர்:- திரு இ சற்குருநாதன் உப தலைவர்:- திரு கா. குமாரரெத்தினம் உபசெயலாளர்:- திரு சோ. பேரின்பநாதன் (ஆசிரியர்)

நிர்வாகசபை உறுப்பினர்கள் திரு வே. இராசதுரை, திரு க செல்லையா, திரு ஆ சி. நாகரெத்தினம் செல்வி பி அன்னமலர், திரு ச. மாணிக்கவாசகர், செல்வி க. பொன்னையா. (இ-167)

### நினைவு தின விழா

யாழ்ப்பாணம், டிச 2

அமரர் இ. க. சண்முகநாதன் அவர்களின் நினைவு தின விழாவும் பாலர் பகல் விடுதிப் பிள்ளைகள் தினவிழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு நீர்வேலியில் நடைபெறும்

சமுதாய முன்னேற்றக் கழகம் ஏற்பாடுசெய்யும் இவ்விழாவிற்கு திரு. வி. எஸ். அப்புத்துரை தலைமை வகிப்பார்.

வலி- கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

அமரர் இ. க. சண்முகநாதன் அவர்களின் நினைவுப் பேருரையை ஓய்வுபெற்ற கல்வித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. ஏ. மயில்வாகனம் நிகழ்த்துவார். (உ-ஓ)

## புல்லுமலையில் இறந்தோர் காணாமற்போனோர் விவரம்
### பலர் குடும்பத்துடன் அழிப்பு

மட்டக்களப்பு, டிச 2

புல்லுமலை கிராமத்தில் நடைபெற்ற கண்ணி வெடித்தாக்குதலின் எதிரொலியாக ஆயுதப் படையினர் மேற்கொண்ட வெறியாட்டத்தில் பலியாகிய குடும்பங்களின் பெயர் விபரம் வருமாறு

குடும்பம்—1 கி. இராஜரத்தினம் (வயது33) மூத்த மகன் சுதர்சன் (வயது 12) இளைய மகன் ரசிகன் (வயது 10) மகள் தயாளினி (வயது 5) பெயரிடப்படாத 3 மாத மகள்.

குடும்பம்–2 எஸ் எம். பீற்றர் (வயது 50) மனைவி லெட்சுமி (வயது 45) மகள் தேவமலர் (வயது 16) மகன் ஜோர்ஜ் (12 வயது)

குடும்பம்-3 தே. கந்தசாமி (வயது 57) மனைவி அங்கம்மை (வயது 52)

குடும்பம் - 4 எஸ். அமிர்தலிங்கம் (வயது27) மனைவி ரேவதி (வயது27) மூத்த மகன் சிவகுணம் (வயது 3) இளைய மகன் கிரருபைராசா (வயது 2)

குடும்பம்-5 எம். எஸ். அடைக்கன் (வயது 48) மகன் பாலசிங்கம் (வயது 5)

ஏனையோர் கே. சந்தனம் (வயது42) சு யிகுமார் (வயது 2) ஆர். வசந்தகுமார் (வயது12) நா. முருகையா (வயது 45) கே சுப்பிரமணியம் (வயது 33) து. இராசலிங்கம் (வயது 23)

மேற்படி 23 பேர் தவிர பின்வரும் 24 பேர் கைது செய்யப்பட்டும் தகவல்கள் எதுவும் இல்லாத நிலையில் இருந்து வருகின்றனர்

அவர்கள் விவரம் வருமாறு:-

மு விஜயசுந்தர (வயது 37) அவரது மகன் டபிள்யூ விஜயசுந்தர (வயது 16) டபிள்யூ எம். குணபால (வயது 35) டபிள்யூ எம் தர்மதாச (வயது 18) உடன் பிறப்புக்கள்.

சி. நவரத்தினம் (வயது 24) சேகர் (வயது 20) உடன் பிறப்புகள்.

மா. பாலசுப்பிரமணியம் (வயது 30) செல்வரத்தினம் (வயது 15) உடன்பிறப்புக்கள்.

எம் ராஜேந்திரம் (வயது 17) கே. செல்லையா (வயது 50) கி. விஜயகுமார் (வயது 34) கே. ராமையா (வயது 52) க. தர்மதுரை (வயது 33).

எஸ் சந்திரராஜா (வயது 40) பி எஸ். கண்ணன் (வயது 40) என். தவராசா (வயது 36) இ. செல்லத்தம்பி (வயது 28) க. கந்தையா (வயது 55)

மு. வைரமுத்து (வயது 44) எம். முத்தையா (வயது 50 கி. சந்தனம் (வயது 55) ராஜரத்தினம் (வயது 40) க. மரியதாஸ் (வயது 35)

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த 7 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

ந. கந்தசாமி, ந. நாதன், கே. ராமு, த. குமாரசாமி, கு. நல்லம்மா, ச. தெய்வானை, ரா. காளியம்மை. (இ-21)

## கடைகள் கையளிக்கப்படும்

ஊர்காவற்றுறை, டிச. 2

இரண்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புளியங்கூடல் சந்தைக் கடைகள் விரைவில் வர்த்தகர்களுக்கு கையளிக்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

தற்போது இச்சந்தை கடைத் தொகுதியின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

ஒப்பந்தக் காரரால் யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையிடம் அது கையளிக்கப்பட்டவுடன் இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படும் எனத் தெரிய வருகின்றது. (உ - 16)

## இளைஞர்களுக்கு கல்வி முக்கியமோ அப்படியே எவ்வளவு சேவையும்

வட்டுக்கோட்டை, டிச.2

இளைஞர்களுக்கு கல்வி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அவ்வாறு சேவையும் முக்கியத்துவம் வாய்ந்தது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி லியோ கழகத்தினர் நடத்திய வருடாந்த பதவி ஏற்பு வைபவமும் மதிய போசன விருந்தும் 'லியோ விக்ரோறியா' புலட்டின் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றன.

நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட தொழில் நுட்பப் பயிற்சி இயக்குநர் லயன் இ விஜயரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

லியோ கழகத் தலைவர் செல்வன் ஏ. தனபாலன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

லயன் இ. விஜயரத்தி [illegible] விக்ரோறியாக் கல்லூரி லியோ கழகத்தினர் சேவையின் சிறப்பை நன்றாக உணர்ந்து தொண்டாற்றி வருகின்றனர் என்றார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபரும் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக தொழில் நுட்ப நிறுவன இயக்குநருமான திரு க. அருணாசலம் உரையாற்றும்போது 'இளைஞர்கள் இனத்தை வழிநடத்த முன்வர வேண்டும். மக்கள் மத்தியில் நல்ல பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் வளர்க்க வேண்டும் என்றார்.

வைபவத்திற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் [illegible] அத்தனாசியார், 'இக்கழகம் லயன்ஸ் கழகத்தோடு போட்டி போட்டு சேவை செய்து வருகிறது. சேவையையே முக்கிய நோக்காகக் கொண்ட இக்கழகத்தினால் மக்களுக்குப் பெரு நன்மையுண்டு' என்றார்.

வட்டு. லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் லயன் உ. ந. தேவகடாட்சம், முன்னாள் பொருளாளர் லயன் எஸ். ரி. வைத்திலிங்கம், பொருளாளர் லயன் எஸ். சக்திவேல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி லியோ கழக இயக்குநர் டாக்டர் ரூபேட் போட்டரும் உரையாற்றினர்.

விக்ரோறியாக் கல்லூரி லியோ கழகச் செயலாளர் வி முத்தழகன் நன்றி நவின்றார். (இ - 161)

## 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு; 09 - 04 - 1959

மறைவு: 02 - 12 - 1984

திரு. க. இலட்சுமிகாந்தன் (லச்சர்)

உன்னை விசாரணைக்கு அழைத்தவர்கள் எமதூதர்களா ?

உன் செய்தி கண்டறியோம் கலங்குகிறோம்.

தாயார், சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிமார்கள்.

மன்னார்.


உளவள ஆலோசனை நிலையம் வழங்கும் ஒரு திட்டம்

உங்கள் பிரச்சினைகளை நேரில் எம்மை அணுகி ஆலோசனைகள் பெறமுடியாதவர்கள் கடித மூலமும் உங்கள் பிரச்சினைகளை எழுதி அந்தரங்க ஆலோசனைகளைப் பெறலாம்.

அப்படிப் பெற விரும்பின்-
ரூபாய் 7/50 க்கு
முத்திரைகள் அனுப்பிப் பெறலாம்

அனுப்ப வேண்டிய முகவரி:-

உளவள ஆலோசனை நிலையம்
(ஆக்கப் பிரிவு)
19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
கண்டுக்குளி, :: யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு:
ஜோ. எகப்டன் செனித் ADS,
யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள் கவனிக்க

தோலகட்டி தயாரிப்புகளுக்கு

முதலாம் திகதி டிசெம்பர் மாதம் முதல் கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி பகுதிகளுக்கு எமது மொத்த சில்லறை வியாபாரிகளாக

ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்
பலாலி வீதி, : திருநெல்வேலி
என்பவர்களை நியமித்துள்ளோம் என்பதனை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்வியங்காடு, கோப்பாய், இருபாலை, நல்லூர் பகுதிகளுக்கு மொத்த சில்லறை வியாபாரிகளாக

சசி கோப்பி அன் கூல்பார்
(சந்தை எதிரில்)
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

என்பவர்களை நியமித்துள்ளோம் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்கள் தேவைகளுக்கு அவர்களை நாடுங்கள்.

ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்,
19/3, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



பிரயாண ஒழுங்குகள்
★ லண்டன்
★ ஜேர்மனி
★ சவூதி
★ குவைத்

லண்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்பும் ஆண், பெண் இருபாலாரையும் எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதிக்கும் குவைத் கிளீனர்ஸ் ஆகவும் செல்லலாம். செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
N. BALA
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

★ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

சிங்கத்தின் பலம் போன்றது ஆண்மை! அதற்கு முதலிடம் கொடு. செல்வத்தை விரும்புவது ஆண்மையே. திடமுடன் முன்னேறு.

.. சுவாமி விவேகானந்தர்

உதயன்
உண்மை - விடுதலை - ஒருமைப்பாடு
இல.15 2ஆவது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
02-12-1986 த.பெ இல.23

# இனப் பிரச்சினையில் தமிழரும் முஸ்லிம்களும்

முஸ்லிம்களின் நலன்களைக் கவனிப்பதற்கென, வார இறுதியில், புதிதாக அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் இயங்கி வந்த ஸ்தாபனமே அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

புதிய அரசியல் கட்சி அனேகமாக கிழக்கிலங்கைத் தளத்தை உடையதாகவே புலப்படுகிறது

முஸ்லிம்கள் தமக்கென ஓர் அரசியல் கட்சியை உருவாக்க வேண்டிய அவசியம் நீண்ட காலமாக இருந்து வந்தது அவர்களது பிரச்சினைகளை சொந்த நோக்கில், தனித்துவமான முறையில் அணுகுவதற்கு அவர்களுக்கென ஓர் அரசியல் கட்சி அவசியம் தேவைப்பட்டது.

ஸ்ரீலங்காவின் தேசியக் கட்சிகளுக்கு ஆதரவளிப்பனவாக, அவற்றின் அங்கங்களாகவே முஸ்லிம் இயக்கங்கள் இதுவரை இருந்து வருகின்றன.

ஆனால் அந்த அமைப்புகளாலோ அல்லது தேசியக் கட்சிகளில் அங்கம் வகித்த முஸ்லிம் அரசியல் வாதிகளாலோ தமது சமூகத்தின் உரிமைகள், சலுகைகளை முழுக்க முழுக்கப் பெறமுடியவில்லை. தலைமைப் பீடத்தின்— தேசியக் கட்சிகளின் அழுக்கங்களுக்கு ஆளாக வேண்டியதாயிற்று. தமது எண்ணக் கிடக்கைகளை வெளியே சொன்னால் பதவி பறிபோகும் என்று நினைத்து பல முஸ்லிம் அரசியல் வாதிகள் தேசியக் கட்சிகளோடு ஒத்து ஊத வேண்டியிருந்ததும் உண்டு. இப்போதும் அதே நிலைதான். உதாரணமாக இனப்பிரச்சினை விஷயத்தில் தமது கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலையில் கிழக்கு முஸ்லிம் எம் பிக்கள் பலர் இருக்கின்றனர்.

புதிய கட்சியின் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் இனப்பிரச்சினையோடு— தமிழர்களோடு சம்பந்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

* இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில், இந்திய அரசு— இலங்கை அரசு— தமிழர் அமைப்புகள் மட்டத்தில் நடக்கும் முத்தரப்புப் பேச்சுக்களில் முஸ்லிம்களும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

* தனித்துவ அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இனமாக முஸ்லிம்களைக் கருதி தமிழர் முன்வைக்கும் தீர்வுகளை ஏற்றுக் கொள்வோம். முஸ்லிம்களும் தமிழர் தான் என்ற அடிப்படையில் வைக்கும் தீர்வை கிழக்கிழங்கை முஸ்லிம்கள் ஏற்க மாட்டார்கள்.

இவற்றில் முதலாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். இரண்டாவது கட்சித் தலைவர் தமது தலைமை உரையில் வெளியிட்ட கருத்து.

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் இப்போது உள்ள நிலையில் அதனை குழப்பி அடிக்கக் கூடியது முதலாவது கோரிக்கை. 1984 இல் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டுக்கு ஏற்பட்ட கதியை ஏற்படுத்த வல்லது. முஸ்லிம்களின் சார்பில் இலங்கை அரசு பேசுவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையே இதுவரை இருந்தது. இப்போது திடீரென நான்காவது தரப்பையும் சேர்த்து பேச்சை நடத்துவது அசாத்தியமானது. அது தீர்வுக்குரிய பேச்சுக்களை நிச்சயம் குழப்பும் என்பதே எமது கருத்தாகும். இதனைக் காலம் பிந்திய கோரிக்கை என்றும் சொலலலாம்.

இரண்டாவது கோரிக்கை சற்று ஊன்றி ஆராயப்பட வேண்டியது. தமிழர்களும் முஸ்லிம்களும் மொழியால் இணைந்தவர்கள், சகோதரர்கள் போன்றவர்கள். வடக்கிலும் கிழக்கிலும் ஒரு வீட்டுப் பிள்ளைகள் போலவே ஒன்றாக வாழ்பவர்கள். அவர்களை இரண்டாகப் பிரித்துப் பார்க்க முடியாது. இரு சாராருக்கும் உள்ள இன்னல்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் அனேகமாக ஒரே வகையானவை. எனவே இருசாராரும் ஒன்று சேர்ந்தே தமது உரிமைகளைப் பெற வேண்டியுள்ளது.

முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பாதுகாக்க விரும்புவதை எவரும் குறை கூற முடியாது. அது அவர்களது அடிப்படை உரிமை. ஆகையால் அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் விதத்திலான சுமுகமான தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டியது தமிழர் கடமை.

சிங்கள அரசாங்கமே முஸ்லிம்களின் பேச்சாளராக இருந்து தமிழர்களையும் அவர்களையும் பிரித்து வைக்க இடம் கொடுக்காது இரு சாராரும் ஒன்று சேர்ந்து தமக்கிடையே ஒரு தீர்வை உருவாக்கி ஒரே குரலில் ஒலிக்க வேண்டும்.

தமிழர் அமைப்புகளுடன் வெளிப்படையாகப் பேசுவதற்கு இதுவரை முஸ்லிம் தலைவர்கள் எவரும் முன்வந்ததில்லை. அதில் விருப்பமுள்ளவர்களும் தமது தேசியக் கட்சித் தலைமைப்பீடங்களுக்கு அஞ்சி ஒளிவு மறைவாகவே பேசி வந்தார்கள்,

இப்போது வெளிப்படையாக அழைப்பு வந்திருக்கிறது. தமிழர் அமைப்புகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்த வேண்டும். எதையும் கள்ளங்கபடமின்றி ஒளிவு மறைவு இன்றி பேசித் தீர்த்துக்கொள்வது மிகவும் சிறந்த மார்க்கம். தமிழர்-முஸ்லிம்கள் ஒற்றுமையைத் தொடர்ந்தும் கட்டிக்காக்க அதுவே நல்வழியும் ஆகும்.

# நைஜீரியாவில் 470 பேர் மஞ்சள் காமாலைக்கு பலி

## நோய்ப் பிரதேசமாக பிரகடனம்

லாகோஸ், டிச. 1

மத்திய நைஜீரியாவில் மஞ்சள் காமாலை நோயினால் 470 பேர் உயிரிழந்தனர்.

இந்த நோய் அங்கு வேகமாகப் பரவுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மூன்று வாரங்களுக்கு முன்னர் இந்த நோயின் தாக்கம் முதலில் கண்டு பிடிக்கப்பட்டது

உலக சுகாதார ஸ்தாபனம் இந்நாட்டை நோய் பரவும் ஆபத்துள்ள நாடு என பிரகடனம் செய்துள்ளது.

இந்த நோயை முற்றாக ஒழிப்பதற்கு 20 லட்சம் தடவைகள் வழங்கக் கூடிய தடுப்பு மருந்துகள் தேவைப்படுகின்றன.

நுளம்பினால் இந்த நோய் பரப்பப்படுகின்றது. (ஒ)

## இரக்கமற்ற முறையில் 22 பயணிகள் கொலை

சண்டிகார், டிச. 1

பஞ்சாப் மாநிலத்தில் கிளர்ச்சியாளர்கள் பஸ் பயணிகள் இருபத்திரண்டுபேரை சுட்டுக் கொன்றுள்ளனர். எட்டுப் பயணிகள் படுகாயமடைந்தனர்.

இதே பஸ்ஸில் பயணம் செய்த நான்கு இளைஞர்கள் பஸ்வண்டியை திசை திருப்ப முயன்றனர். பயணிகளையும் இறங்குமாறு பணித்தனர்.

ஆனால் இத்திட்டம் சரிவராது போகவே துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

பின்னர் அந்த நால்வரும் பஸ்ஸில் இருந்து இறங்கி ஓடித் தப்பிவிட்டனர்.

பஸ் பயணிகள் கொலை குறித்து பெரும் அதிர்ச்சியை பிரதமர் ராஜீவ் காந்தி வெளியிட்டார்.

அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டு மிராண்டித்தனமான செயல் இதுவாகும் என பிரதமர் தெரிவித்தார்.

இந்தியாவின் ஒற்றுமைக்கு எதிரான சதி நடவடிக்கை ஒன்றின் விளைவே இக்கொடிய செயல் என ஜனாதிபதி ஷெயில் சிங் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் சக்திகளின் பணிப்புகளுக்கமையவே இச் செயல் இடம் பெற்றுள்ளது என பஞ்சாப் முதலமைச்சர் பர்னாலா அறிவித்தார். (ஒ)

## பேச்சுவார்த்தைக்கு ஆப்கான் ஆயத்தம்

காபூல், டிச. 1

பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஐ.நா.வின் ஆதரவுடன் நடத்துவதற்கு ஆப்கானிஸ்தான் சம்மதம் தெரிவித்துள்ளது

ஆப்கானிலிருந்து ரஷ்ய துருப்புகள் விலக்கிக் கொள்வது பற்றிய கருத்து வேற்றுமையால் பேச்சுக்கள் முன்னர் ஸ்தம்பிதமடைந்தன.

ஆப்கான் வெளியுறவு அமைச்சர் தோஷ் துங் இப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர்வதில் ஆர்வம் தெரிவித்து வந்திருந்தார்.

இதனால் ஜெனீவாவில் விரைவில் பேச்சுக்கள் மீண்டும் தொடரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பாகிஸ்தானின் முற்றுகை நடவடிக்கையைத் திசை திருப்பவே இந்த நடவடிக்கை என பாகிஸ்தான் வானொலி அறிவித்தது

## அம்பேத்கர் நினைவுதின விருது

புதுடில்லி, டிச.1

டாக்டர் அம்பேத்கரின் 100வது பிறந்ததின நினைவுக் குழுவினர் சர்வதேசவிருதுகளையும், ஐந்து தேசிய விருதுகளையும் வழங்கவுள்ளது.

ஏழைகளுக்காகவும் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்காகவும் பாராட்டத்தக்க வகையில் பணி புரிந்தோரையும் கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படும்.

டாக்டர் அம்பேத்கரின் 100ஆவது பிறந்த தினம் 1991ஆம் ஆண்டு கொண்டாடப்படும். (ஒ)

## வெளி உலகில்

## "தமிழ் நாட்டில் கூட்டரசு அவசியமில்லை"

ஈரோடு, டிச. 1

தமிழ் நாட்டில் அ. தி. மு. க — இந்திரா காங்கிரஸ் கூட்டரசு அமைக்க வேண்டிய அவசியம் தற்சமயம் ஏற்படவில்லை

இப்படி இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு ஜி. கருப்பையா மூப்பனார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் அ. தி. மு. க இந்திரா காங்கிரஸ் கூட்டரசு ஒன்று ஏற்படும் என்றும்,

அதில் இந்திரா காங்கிரஸுக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும்

தமிழக அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது

அது பற்றிக் கேட்ட போது திரு மூப்பனார் இத்தகவலை வெளியிட்டார்

தமிழ் நாட்டில் அ தி. மு க- வுடன் இந்திரா காங்கிரஸ் செய்து கொண்ட உடன்பாடு சட்டசபை ஆசனங்களை பகிர்ந்து கொள்வதற்கே ஒழிய, கூட்டரசு அமைப்பதற்கு அல்ல.

தமிழ் நாட்டில் காங்கிரஸுக்கு உறுப்பினர்கள் சேர்ப்பது மாவட்ட அடிப்படையில் இடம் பெறுகின்றது பின்னர் மாவட்ட காங்கிரஸ் குழுக்களுக்கான தேர்தல்கள் நடைபெறும்.

இப்படி திரு. கருப்பையா மூப்பனார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் (ஒ - எ)

## புதிய பெயர்

திருநெல்வேலி, டிச.1

திருநெல்வேலி மாவட்டம் இனிமேல் நெல்லை—கட்டப் பொம்மன்' மாவட்டம் என்று அழைக்கப்படும்.

முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இப்படி அறிவித்திருக்கின்றார். (ஒ-எ)

## படையினர் தேசிய தினம்

புதுடில்லி, டிச. 1

இந்தியாவின் எல்லைப் பகுதி பாதுகாப்புப் படையினர் தமது 22 வது தேசிய தினத்தை இன்று கொண்டாடினர்.

ஜனாதிபதி, பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோர் பாதுகாப்பு படையின் சேவைகளைப் பாராட்டி கருத்து வெளியிட்டனர். (ஒ)

## விற்பனைத் தடை நீக்கம்

புதுடில்லி, டிச. 1

போப்பாலில் உள்ள யூனியன் கார்பைட் நிறுவனம் அதன் சொத்துக்களை விற்பதற்கிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

போப்பால் நீதிமன்றம் இந்த தடையை நீக்கியது

நிதி சீர்திருத்தச் சட்டத்திற்கு இந்த தடை பெரும் ஊறு விளைவிப்பதாக யூனியன் கார்பைட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. (ஒ)

# வெளிநாட்டு ராஜதந்திரிகள் சபையில் குறிப்பு எடுக்கலாமா?

## லக்ஷ்மன் கேள்வி

கொழும்பு டிச.2

வெளிநாட்டு இராஜதந்திரிகள் நாடாளுமன்றத்துக்கு வந்து, நடப்பவற்றைக் குறிப்பெடுத்து தங்கள் நாடுகளுக்கு அனுப்பலாமா?

அத்தனகலை எம். பி. திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இக்கேள்வியை எழுப்பினார்.

வெளிவிவகார அமைச்சு நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விவாதம் குழு நிலையில் நடந்த போதே திரு. ஜெயக்கொடி இது சம்பந்தமாக ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.

ராஜதந்திரி ஒருவர் கலரியில் இருந்து நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை குறிப்பு எடுப்பதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. அப்படியானால் எல்லா இராஜதந்திரிகளையும் குறிப்பு எடுக்க அனுமதிக்க வேண்டும்.

இப்படி திரு. ஜெயக்கொடி சொன்னார்,

சபாநாயகரின் கவனத்துக்கு இது விஷயத்தைக் கொண்டு வருவதாக குழுத் தலைவர் அறிவித்தார். (இ-எ)

## வங்கிகள் கைவிரிப்பு; விவசாயிகள் கஷ்டம்

ஊர்காவற்றுறை, டிச 2

தீவுப்பகுதி விவசாயிகளுக்கு வங்கிக் கடன்களை வழங்கி வந்த ஊர்காவற்றுறை இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் கிளைகள் தற்போது கையை விரித்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வங்கிகளிலிருந்து கடன்களைப் பெற்று விளைபொருட்களை உற்பத்தி செய்து பின்னர் அவைகளை விற்று கடனை மீளச் செலுத்தி வந்த விவசாயிகள் இம்முறை கடன் வழங்கப்படாமையால், தமது உற்பத்தியை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மக்கள் வங்கி அடைவுக்கு நகைகளைப் பெற்றுக் கொள்ளாத படியால்,வெளியே தனியாரிடம் அதிக வட்டிக்கே பணம் பெற வேண்டியுள்ளதாகவும் ஒரு விவசாயி 'உதயனுக்கு' கவலை தெரிவித்தார். (உ-16)

## நாகேஸ்வரி வித்தியாலய திறப்பு விழா

சுன்னாகம், டிச 2

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை முன்றலில் அதிபர் திரு. மு. நாகேந்திரம் தலைமையில் நடைபெறுகிறது.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

வரவேற்புரையைபாடசாலை அபி. சங்கச் செயலாளர் திரு. நா. இராசரத்தினம் வழங்க திரு. சி. சிவகுரு புதிய கட்டடத்தை அதிபரிடம் ஒப்புவிப்பர். (இ-27)

## பிரதம தபாலகத்தில் தொலைபேசி இல்லை!

மட்டக்களப்பு, டிச. 2

மட்டக்களப்பு பிரதம தபால் நிலையத்தில் கடந்த சில மாதங்களாக தொலைபேசி வசதிகள் இல்லை.

இந் நிலையத்தில் இடம் பெற்ற கொள்ளையின் போது தொலைபேசிகளும் எடுத்துச் செல்லப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது. (உ-21)

## 10 வருடங்களுக்கு மேல் கடமை புரியும் நீர்ப்பாசன கனிஷ்ட ஊழியருக்கு மாதச் சம்பளம் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 2

10 வருடங்களுக்கு மேல் கடமை புரியும் நீர்ப்பாசனத் திணைக்கள கனிஷ்ட ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

நீர்ப்பாசனத் திணைக்களத் தொழிலாளர்களினதும் ஊழியர்களினதும் கஷ்டங்கள் சம்பந்தமான கோரிக்கைகளை; அரசாங்கப் பொதுச் சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளது அதிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சர், அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர், நீர்ப்பாசன திணைக்களத்தின் கிளிநொச்சி பிராந்திய பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்கு சங்கத் தலைவர் சி. ஆறுமுகம் கோரிக்கைகளை அனுப்பியுள்ளார்.

மற்றும் கோரிக்கைகள் வருமாறு:

1. 10 வருடங்களுக்கு மேல் கடமை புரியும் கனிஷ்ட ஊழியருக்கு மாதச்சம்பளம் வழங்க வேண்டும்.

மற்றைய இலகா ஊழியர்கள் போன்று நீர்ப்பாசன இலாகா கனிஷ்ட ஊழியர்களுக்கும் இளைப்பாற்றுச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே இளைபாறியுள்ள ஊழியர்களுக்கும் இளைப்பாற்றுச் சம்பளம் வழங்க வேண்டும்.

2. நீர்ப்பாசன ஊழியரின் ஆட்குறைப்பைத் தடுக்க வேண்டும்.

3. ஊழியர்களுக்கு மீண்டும் புகையிரத ஆணைச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.

4. கனிஷ்ட ஊழியர்களுக்கு வேலைநாட்களை குறைக்காது; கிழமை நாட்களில் வேலை வழங்க வேண்டும்.

5. காட்டுப் பிரதேசங்களில் தங்கும் வசதியற்ற ஊழியர்களுக்கு; அரசாங்க விடுதிகளை வழங்க வேண்டும். (இ-5)



## பொய்யாமொழி

குறள்:

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.

பொருள்:

இடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல்லுயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

## வீதியில் "தடாகம்"

அச்சுவேலி, டிச. 2

அச்சுவேலி பஸ் நிலைய இலுப்பையடிச் சந்தியில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பிரதான வீதி படு மோசமாக பழுதடைந்திருக்கிறது. இந்த வீதியில் ஆங்காங்கே ''தடாகங்கள்'' காணப்படுகின்றன.

நீண்ட காலமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் மிகப் பெரிய குழிகளுடன் காணப்படும் இந்த வீதியால் வாகனங்கள் போய் வருவது மிகுந்த கஷ்டமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

வீதியில் உள்ள குழிகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் வீதியால் நடந்து செல்வோர் அவ்வப்வேறு சேற்று நீர் அபிஷேகத்திற்கும் இலக்காகின்றனர்.

இந்த வீதியில் அச்சுவேலி புதிய தபால் நிலையத்திற்கு முன்னால் காணப்படும் மிகப் பெரிய குழிகள் நீர்த்தடாகம் போல இப்போது காட்சியளிக்கின்றன. (உ-11)

## மன்னார் அகதிகளுக்கு ஜப்பானிய லயன்ஸ் உதவி

யாழ்ப்பாணம், டிச. 2

மன்னார் அகதிகளுக்கு ஜப்பானிய லயன்ஸ் கழகம் 200 உடைப் பொதிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதுவரை 101 குடும்பங்கள் இவ்வுதவியை பெற்றுள்ளன.

ஏனைய அகதிகளுக்கும் இவ்வுதவியைப் பெற்றுக் கொடுக்கும் ஒழுங்குகளை, மன்னார் அரச அதிபரும் மன்னார் லயன்ஸ் கழகமும் மேற்கொண்டு வருகின்றன. (இ - 5)

## தொலைபேசி அவுட்

மட்டக்களப்பு, டிச.2

காத்தான்குடி பகுதிக்கான தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. (உ-21)

## வாசகர் நெஞ்சம்

### மட்டக்களப்பு பயணிகள் அவலம்

மட்டக்களப்புக்கு கிழமையில் மூன்றுநாட்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் செல்கிறது. பஸ்ஸுக்கு ஆசனப்பதிவு கிடையாது.

பஸ், பஸ் நிலையத்திற்கு அதிகாலை 4 மணிக்கு வந்து 4-30க்குப் புறப்படுகிறது. பஸ்ஸில் ஆசனம் பிடிப்பதற்காக சிலர் இரவு 12மணிக்கே வந்து தவம் இருக்கின்றனர். எம்மைப் போன்ற தூர இடங்களிலிருந்து வரும் பிரயாணிகளும் பெண்களும் குழந்தைகளும் விடியற்காலை 4 மணிக்கு வந்தால் ஆசனம் கிடையாது 235 மைல்களை நின்று பிரயாணம் செய்ய பெண்களால் முடியுமா? அல்லது ஷெல் தாக்குதல் மத்தியில் பஸ் நிலையத்தில் முதல் நாளே வந்து காவல் இருக்க முடியுமா? இந்த அபாயகரமான நிலையில் இருந்து மட்டக்களப்பு பயணிகளுக்கு விடிவே கிடையாதா?

90 மைல் செல்லும் வவுனியாவுக்கு ஆசனப் பதிவு உண்டு. 235 மைல் செல்லும் மட்டக்களப்புக்கு ஆசனப் பதிவு கேட்டால் போக்குவரத்து ஊழியர்கள் கையை விரிகின்றனர். இதைவிட அநியாயம் சிலர் தமக்குத் தெரிந்தவர்களுக்கு ஆசனம் பிடித்துக் கொடுக்கும் கொடுமை. ஆகவே எம் போன்ற பிரயாணிகளும் பெண்களும் வேண்டுவது என்னவென்றால் மட்டக்களப்பு பஸ்ஸுக்கும் முன்பு போல ஆசனப் பதிவு செய்ய வசதி அளிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம், எஸ். தங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wyman English Language
INSTITUTE
ENGLISH ASSISTANT TEACHERS' EXAM
20, மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 8 - 12 - 86
S. B. IYAR
நேரம்: 10 00—11.30 காலை
12, வைமன் வீதி, நல்லூர்.

# உதயன்

02- 12 1986 செவ்வாய்க்கிழமை

Wyman English Language
INSTITUTE
'TOEFL' வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
திங்கள், வெள்ளி: காலை 11 30 - 1 30
சனி, ஞாயிறு: மாலை 1 30 - 2.30
S.B IYAR
12, வைமன் வீதி, நல்லூர்.

# இனப்பிரச்சினை பற்றி ஆஸி அரசுக்கு பூரண அறிக்கை

புதுடில்லி, டிச. 2
இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி ஆஸ்திரேலியா அரசாங்கத்துக்கு பூரண அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் அண்மையில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழுவே, இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது.

தமிழ்நாடு சென்றிருந்த இத்தூதுக்குழுவிடம் இலங்கைத்தமிழர் அமைப்புக்கள், தமிழர் பிரச்சினை பற்றிய பல மகஜர்களைக் கையளித்தன.

அச்சமயம் தூதுக்குழுவின் தலைவரான திருமதி இலெய்ன் எலிஸபத் டார்லிங் சொன்னதாவது:

இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஆஸ்திரேலிய நாட்டினர் நன்றாக அறிந்துள்ளனர். இப்பிரச்சினைக்கு விரைவில் அமைதித் தீர்வு ஒன்றையே நாம் விரும்புகிறோம்.

இப்பிரச்சினையில் ஆஸ்திரேலிய அரசாங்கம் பக்கச்சார்பாக நடக்கவில்லை.

பிரச்சினையைத் தீர்க்க இந்தியப்பிரதமர் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எமது அரசு ஆதரவு வழங்குகின்றது.

ஆஸ்திரேலியாவில் பல இன மக்கள் வாழ்கின்றனர். ஆனால் பிரச்சினையாக அது இருக்கவில்லை.

அரச மட்டத்தில் இனப்பிரச்சினைகள் பெரிதாக்கப்படுவது இல்லை. விழிப்புணர்ச்சி பெற்ற பிரஜைகள் சமூக வாழ்க்கையை பாதிக்கக்கூடிய அளவுக்கு கருத்து வேறுபாடுகள் வளர்ச்சி பெற அனுமதிப்பதில்லை.

இப்படி தூதுக்குழுத் தலைவர் திருமதி டார்லிங் சொன்னார்

இனப்பிரச்சினை பற்றி நேரமுகமாக விசாரித்தறிந்த தகவல்களை வைத்து சொந்த அபிப்பிராயங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை தூதுக்குழு ஆஸ்திரேலிய பிரதம மந்திரிக்கு சமர்ப்பிக்கும் என்றும் திருமதி டார்லிங் தெரிவித்தார். (இ-எ)

# மோட்டார் சைக்கிள் கடத்தல்கள் பற்றி ஈ. பி. ஆர் எல். எப்.

யாழ்ப்பாணம், டிச. 2
மோட்டார் சைக்கிள் கடத்தல் பற்றி ஈ. பி. ஆர். எல். எவ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

கடந்த சில தினங்களுக்குள் உரும்பராய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து பச்சை நிற வானில் வந்தவர்களால் மோட்டார் சைக்கிள் ஒன்று கடத்தப்பட்டது. அதேபோல் கடந்த 30-11-86 அன்று மானிப்பாயில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் வைத்து பச்சை நிற வானில் வந்தவர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றை பறித்துச் சென்றுள்ளார்கள்.

எமது முகாமொன்றில் வந்து மோட்டார் சைக்கிளை மீளப் பெற்றுச் செல்லும்படி உரிமையாளரிடம் மோட்டார் சைக்கிளைக் கடத்தியவர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

இத்தகைய சம்பவங்களுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று கூறிக் கொள்வதோடு மக்கள் மத்தியில் எம்மைப்பற்றிய தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்று வரும் இச் சம்பவங்களைப் பற்றி மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமது ஸ்தாபன தேவைகளுக்காக எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பாவித்து உங்களிடம் யாராவது வாகனங்களைக் கேட்டால் உங்களுக்குப் பரிச்சயமானவர்களிடமோ அல்லது அடையாளம் காணக் கூடியவர்களிடமோ மட்டுமே கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

மக்களே! இதுபோன்ற சம்பவங்கள் பற்றிய தகவல்களை எமக்குத் தெரிவியுங்கள் உண்மையான கடத்தல்காரர்களைக் கண்டு பிடிப்பதில் துணையாயிருங்கள்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வளாகம் திரும்பினர்

யாழ்ப்பாணம், டிச. 2
சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட மாணவர்கள், தங்கள் வைத்திய பரிசோதனையை முடித்துக் கொண்டு வளாகம் திரும்பினர்.

குடல்புண் நோய் காரணமாக உண்ணாவிரதத்தை இடையில் கைவிட்ட மட்டக்களப்பு மாணவியும் தனது வைத்திய சிகிச்சையை முடித்துக்கொண்டு திரும்பினார். (இ-5)

# யாழ் பல்கலைக்கழக மாணவர் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், டிச. 2
யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணாமல் போனது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்டு வரும் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இயக்கங்கள் தமது 5 அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்ட மாணவர்கள் விஜிதரன் விடுதலை செய்யப்படுவதற்கானதமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது என தீர்மானித்தனர்.

இதன் தற்போதைய நடவடிக்கையாக, நேற்று முதல் விரிவுரைகளைப பகிஷ்கரித்து வருகின்றனர்.

நாளை நடைபெறவுள்ள மாணவர் பொதுக் கூட்டத்தில் போராட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையைப் பற்றி தீர்மானிக்கப்படவுள்ளது என மாணவர் அவைப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

# சம்பள உயர்வு கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், டிச. 2
அண்மையில் அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

இவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வுப்பாக்கியைகூடிய விரைவில் வழங்க வேண்டும் என அரசாங்கப் பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளைத் தலைவர் திரு. சி ஆறுமுகம் கிளிநொச்சிதிணைக்கள பிரதிப்பணிப்பாளரை கேட்டுள்ளார். (உ - 5)

# சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிச. 2
யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களின்சித்திரக் கண்காட்சியின் இரண்டாம்நாள் இன்று ஆகும்.

யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்றுவரும் இக்கண்காட்சியை திரு இரா. சுந்தரலிங்கம் நேற்று ஆரம்பித்துவைத்தார்.

பிரவேசம் இலவசம் என்றும், நாளைவரை இக்கண் காட்சி நடைபெறும் என்றும் சித்திரக் கல்வி அதிகாரி திரு. ஆ தம்பித்துரை தெரிவித்தார். (இ-5)

# அமைச்சருக்கு லண்டனில் சிகிச்சை

கொழும்பு, டிச. 2
இருதய நோய்க்கு ஆளான சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்துபத்து வைத்திய சிகிச்சைக்காக லண்டன் கொண்டுபோகப்பட இருக்கிறார்.

தற்சமயம் இவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (இ-ஐ-எ)

# வீரவணக்கம்

யாழ்ப்பாணம், டிச. 2
திரியாயில் புலிகளின் முகாமை கடந்த வெள்ளியன்று இராணுவத்தினர் முற்றுகையிட முயன்றபோது அதனை முறியடிப்பதற்காக புலிகள் நடத்திய சமரில் மேலும் இரு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

இம் மோதலில் உயிரிழந்த காப்டன் கருணா (முத்துக்குமாரு யுகராஜா, சாம்பல்தீவு) ஜெனகராஜ் ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் வீரவணக்கம் செலுத்தியிருக்கிறது. (உ)

# வான் விபத்தில் சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், டிச .2
வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த தனியார் மினி பஸ் ஒன்று விபத்தில் சிக்கியது. சிறுவன் ஒருவன் பலியானான்.

இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பேர் காயமடைந்தனர்.

நேற்றுப் பகல் 12 மணி அளவில் யாழ் தேவி ரயிலில் வந்த பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த இந்த பஸ் நொச்சிமோட்டையில் விபத்துக்குள்ளாகியது

வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பையா ஜெயராஜ் (13 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

பிரஸ்தாப சிறுவன் ரயில் நிலையத்தில் கடலை வியாபாரம் செய்து வருபவர் என்று கூறப்படுகிறது

காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களுள் தவஞானம் என்பவர் நெஞ்சில் பலத்த காயத்துடன் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப் பட்டார். (இ-10)

# இனப்பிரச்சினை---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
கிடைக்காததால் இணை அமைச்சர் குழுவின் கொழும்பு விஜயம் மேலும் தாமதமாகும். அல்லது கொழும்பு வந்து போராளிகளின் நிலைப் பாடுகளும் இதுதான் என்று இலங்கை அரசிடம் நேரடியாக அறிவித்துவிட்டுத் திரும்பி விடும்—இப்படி புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது. (அ-எ)

# நேற்றும்---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
கின்றனர்.

இது தொடர்பான அடுத்த நடவடிக்கையை எடுப்பதற்காக ஊழியர்கள் இன்று கூடித் தீர்மானிப்பார்கள் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஊழியர்கள் தொடர்ந்தும் கடமைக்குச் செல்ல மறுத்தால் யாழ் தொலை தொடர்புச் சேவைகள் ஸ்தம்பிதம் அடையலாம் எனத் தெரியவருகிறது (இ-10)

# விஜே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டு சிப்பாய்களின் உறவினர்களுடன் திரு. குமாரணதுங்கா பஸ்ஸில் யாழ்ப்பாணம் வருவதற்குத் தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகிறது (இ-எ)

# ஜி. சி. ஈ சாதாரணதரபரீட்சை: இடம் பெயர்ந்த மாணவரின் பிரச்சினை

யாழ்ப்பாணம், டிச 2
வன்செயல்களால் இடம்பெயர்ந்து அகதிகளாக வந்துள்ள மாணவர்களில் பலர் இத்தடவை ஜி சி ஈ (சாதாரணதர) பரீட்சையில் தோற்ற வேண்டியுள்ளனர்.

இவர்கள் தமக்கு ஒரு தனிப்பரீட்சை மண்டபம் அமைத்துத் தரும்படி கல்வித் திணைக்களத்தைகேட்டுள்ளனர்.

இவர்களுக்குரிய நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது எனவும்; இன்று அதற்கான முடிவுகள் அனேகமாகக் கிடைக்கும் என்றும் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் தெரிவித்தனர். (இ - 5)

1987 ஆம் ஆண்டுக்கான
## கலண்டர் விற்பனைக்கு
எம்மிடம் மெய்கண்டான் கலண்டர்கள், டயரிகள் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
விலை No 1 — 29-50 No. II — 27-50
மேலும் விபரங்களுக்கு:
மாக்மிலன் புத்தகசாலை
No. 3. பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
(மெய்கண்டானல் அனுமதி பெற்ற யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்)

## பிரயாண ஒழுங்குகள்
✱ சவூதி அரேபியா ✱ சிங்கப்பூர்
✱ குவைத் ✱ ஜேர்மனி ✱ லண்டன் U.K.
1. சவூதி அரேபியாவுக்கு (Open Visa)
தொழில் வாய்ப்புடன் உடனடி பிரயாணம் மேற்கொள்ள விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
2. சிங்கப்பூர்
தொழில் வாய்ப்புடன் செல்லவிரும்பும் ஆண்களும் பெண்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.
3. குவைத்
குவைத் டிறைவிங் லைசென்ஸ் உள்ளவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
4. ஜேர்மனி - லண்டன்
செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.
(குறிப்பிட்ட வெற்றிடங்கள் மட்டும் உண்டு)
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
TRI STAR TRAVELS
றை ஸ்ரார் றவல்ஸ்
No, 6, நவீன சந்தை மேல்மாடி.
தொலைபேசி இல: 23831
மு.கு: யாழ்நகர் நிலைமை சீரற்று. எமது அலுவலகம் மூடப்பட்டிருப்பின் கீழ் வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.
71. குருசோ வீதி, (சுண்டுக்குளி) யாழ்ப்பாணம்.
வே. குகராஜா, மயிலியதப்புலம்
கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.
N. தயானன், மயிலணி வடக்கு, சுண்ணாகம்.

# ஜே,ஆர்- பேச்சு நடத்த பகிரங்க---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இருப்பதை ஒன்றாக இணைக்கவேண்டும் என்று நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கும் போது இரண்டை நாலாகக் கூறுபோடும் யோசனையை நாங்கள் எப்படி ஏற்க முடியும்? அதனால் நிராகரித்து விட்டோம்.

## திரும்பத் திரும்பச் சொல்லி...

ஆனால் ஜே. ஆர் சொன்ன திட்டத்தை இவர்கள் திரும்ப திரும்ப சொல்லி எங்களை திருப்திப்படுத்த முயன்றார்கள் நாங்கள் எங்கள் தமிழீழத்தை கூறுபோட சம்மதிக்க முடியாது என்றும் ஏற்பதற்கில்லை என்பதையும் திட்ட வட்டமாகச் சொன்னோம்.

கேள்வி:- கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிப்பதால் என்ன தீமை ஏற்பட்டுவிடும் என்று நீங்கள் அஞ்சுகிறீர்கள்?

பதில்:- தமிழர்களின் நிலப் பரப்பளவில் பிரிக்கப்பட்டு விடுகிறார்கள். அடுத்து மத அடிப்படையில் தமிழர் - முஸ்லிம்கள் என்று பிரிக்கப்படுகிறார்கள் இதனால் அன்டைப் பகுதிகளில் உள்ள சிங்களவர்கள் இந்தப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டு நாளடைவில் தமிழர்கள் சிறுபான்மை ஆவதுடன் நாடற்றவர்கள் என்ற நிலைக்கு வந்து விடுவார்கள். பூர்வீகக் குடியினரான தமிழர்களும் 150 ஆண்டுகளுக்கு முன்பே வந்து நாட்டை வளமாக்கிய மலையகத் தமிழர்களும் நாடற்றவர்களாக மாறக்கூடிய திட்டத்தை நாங்கள் எப்படி ஏற்க முடியும்.

கேள்வி:- நீங்கள் பெங்களூரில் நிர்ப்பந்தம் செய்யப்படவில்லை என்பதை மறுத்தாலும் அதற்கு முன் இங்கு (சென்னை) நீங்கள் பொலீஸ் காவலில் இருந்ததையும் உங்கள் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் நீங்கள் மோசமான முறையில் பொலீஸ் நிலையத்தில் நடத்தப்பட்டதையும் பார்க்கும்போது நிச்சயமாக நீங்கள் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள் என்று ஊகிக்கமுடிகிறது

பதில்:- ஊகங்கள் முடிவு ஆவதில்லையே! இங்கு பொலீஸார் நடந்து கொண்ட முறை விரும்பத்தகாதது தான்! அதைக் கண்டித்திருக்கிறோம். பொலீஸ் நடவடிக்கையும் ஏற்கக்கூடியதில்லை.

அன்று காலை 6 மணி அளவில் பொலீஸார் வந்தார்கள் சோதனை போடப்போவதாகச் சொன்னார்கள் ஆயுதங்களை ஒப்படைக்கச் சொன்னார்கள். நானே எங்கள் பாதுகாப்புக்காக வைத்திருந்த எல்லா ஆயுதங்களையும் கொடுத்துவிடச் சொன்னேன்.

பிறகு விசாரணை என்று பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஒன்றரை மணி நேரம் வைத்திருந்தார்கள் கிரிமினல் கைதிகளை படம் எடுப்பது போல் பக்கவாட்டில், நேராக படம் எடுத்தார்கள்.

அப்போதே அதை நான் கண்டித்தேன். நாங்கள் என்ற கிரிமினல்களா? மக்கள் பிரதிநிதிகள் (பொலீஸார்) செய்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு கட்டுப்பட்டு இருந்தேன்

கேள்வி: இங்கிருந்த பொலீஸ் அதிகாரி மோகன்தாஸ் உங்கள் வீடியோ படங்களை சிங்கள அரசுக்கு அனுப்பி வைத்தார் என்று நெடுமாறன் குற்றம் சாட்டி இருந்தார் தமிழக அரசு— தமிழக பொலீஸ் நடவடிக்கைகளும் சிங்கள இனவாதிகளுக்கும் மகிழ்ச்சி அளிப்பதாகவே இருந்து வருகின்றன. எனவே இந்த வீடியோ சிங்களவர்களுக்கு அனுப்பப்படாமல் இருந்தால் சரி. இது இருக்கட்டும் ஜெயவர்த்தனாவை இந்திய அரசு தன்வழிக்கு கொண்டு வந்து விடும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

பதில்: உண்மையில் ஜே ஆரை தன் வழிக்கு கொண்டுவர முடியாததால் தான் பேச்சு வார்த்தை மூலம் இழுத்துக் கொண்டிருக்கிறது. தமிழர்களுக்கு பாரம்பரிய பூமி இருக்கிறது என்பதையே ஜே. ஆர். ஏற்றுக் கொள்ளவில்லையே. அதை ஒத்துக்கொள்ளச் செய்வதற்கு பதிலாக எங்கள் தலையை நசுக்க ஆரம்பித்து விட்டார்கள். இவர்களால் ஜே. ஆரை வெல்ல முடியவில்லை

## போகத் தயார்

கேள்வி: பெங்களூரில் கூடிய ''சார்க்'' மாநாட்டில் பயங்கரவாதிகளுக்கு இடங்கொடுக்க மாட்டோம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். சொந்த நாட்டு விடுதலைக்காக சுதந்திரப் போராட்டம் நடத்தும் உங்களை பயங்கரவாதிகள் என்ற பட்டியலில் சேர்த்து வெளியேற்றினால் என்ன செய்வீர்கள்?

பதில்: இதில் இந்தியப் பிரதமர் ராஜீவ் தெளிவாகவே விளக்கி இருக்கிறார். அது அந்த அந்த நாட்டுச் சூழ் நிலையைப் பொறுத்து கவனிக்க வேண்டியது என்று சொல்லியிருக்கிறார்கள் ஆனால் எங்களை வெளியேறச் சொன்னால் நாங்கள் போகத் தயாராகவே இருக்கிறோம்.

கேள்வி: ஒரு முக்கியமான பிரச்சினையையும் இங்கே சொல்ல விரும்புகிறேன் அதாவது நீங்கள் ஓர் இயக்கத் தலைவரின் பேச்சைக் கேட்டு நடப்பதாக ஒரு செய்தி தமிழகத்தில் பரவி இருக்கிறது.

இதனால் அந்தக்கட்சித் தலைவருக்கு எதிராக செயற்படக்கூடிய பெரிய இயக்கங்களின் ஆதரவு உங்களுக்கு கிடைக்காமல்போகலாம் அல்லவா?

பதில்: நீங்கள் குறிப்பிடக்கூடிய தலைவரின் பேச்சை கேட்டு நடப்பதாக இருந்தால் அவர் சொன்ன எல்லாவற்றுக்கும் நான் சம்மதித்து இருக்க வேண்டுமே?

என்னைப் பொறுத்தவரை எங்கள் நாட்டுக்காக போராடுகின்ற என் சகோதர போராளிகளைக் கேட்டுத்தான் செயற்படுகிறேன். வேறு யார் கருத்தையும் கேட்பதில்லை.

கேள்வி: தமிழ் ஈழத்தின் தலைநகர் எது?

பதில்: திருகோணமலை. இதற்குத் தானே பெங்களூரில் தகராறு நடந்தது (அ-10)

# விரிவுரைக்கு --

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தப் போராட்டத்தைக் கைவிட்டதை வரவேற்கும் அதே வேளை; இப்பிரச்சினையை ஒரு சமுக முடிவுக்குக் கொண்டு வர பல்கலைக் கழகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பாடுபட்ட அனைவருக்கும் தன் நன்றியையும் துணை வேந்தர் தெரிவித்துள்ளார். (இ-5)

எமது இனியவனுக்கு
## கண்ணீர் அஞ்சலி



தர்மலிங்கம் பிரபாகரன் (ஹரன்)
தோற்றம்: 26 - 12 - 1969 மறைவு: 28 - 11 - 1986

எம்முயிர் பிரபாவே!
திருமலை மக்களின் துயர் துடைக்க வென்று நீ எமைப் பிரிந்து சென்றாயோ? திரும்பி நீ வருவாய் என வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்தோம் ஆனால் நீ— தியாகச்சுடர்களின் பட்டியலில் உன் திருவடியைப் பதித்து விட்டாயோ?
எம்முயிர் பிரபாவே!
இனவெறி பிடித்தலையும் கொடிய அரக்கர் மத்தியில் நீ தனியொருவனாய் தமிழன்னை மடி சேர்ந்தாயோ?
மரித்துவிட்ட மறவர் மத்தியில் மங்கா மாணிக்கமாய் நீயும் சேர்ந்தனையோ எம் பிரபாவே!
உன் மறைவு எம்மையெல்லாம் வாட்டுகிறதெடா!
உறவாய் எம் உளமமர்ந்து உறைந்து விட்டாயடா நீ!
உன் பிரிவினால் வாடுகிறோம்........ துடிக்கிறோம்.

எஸ். குணரெத்தினம் குடும்பத்தினர், 'மிது விடியோ மூவீஸ்,, சித்தன்கேணி
எஸ். தர்மலிங்கம் குடும்பத்தினர், 'செந்தூர் இல்லம்', தபாற் கந்தோர் ஒழுங்கை, கோப்பாய்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட் )லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 02-12-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane. Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 85 T'PhoneNo 24805. 22073.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org